28th January 1972]

Pangolin Animal

* 50 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any giant pangolin animal has been captured in Banavaram Forest near Arni about the 12th December 1970; and

(*b*) whether any steps have been taken to protect this breed ?

எறும்புதின்னி பெரும் விலங்கு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970 டிசம்பர் 12-ஆம் நாள் அளவில் ஆரணிக்கு அருகில் பாணவரம் காட்டில் எறும்புதின்னி பெரும் விலங்கு ஏதாவது பிடிக்கப் பட்டதா ?

(இ) இந்த இனத்தைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) தமிழ் நாட்டில் இந்த வனவிலங்கு இனத்திற்கு தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்காக அரசின் பரிசீலனையில் உள்ள வன விலங்குகள், வனப் பறவைகள் பாதுகாப்பு மசோதாவில், வகை செய்ய உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : இந்த விலங்கினம் பிடிக்கப்பட்டு எங்கே வைக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : கிண்டி பூங்காவிலே தனியாகக் கூண்டு அமைத்து ஓராண்டுக் காலமாக வைக்கப்பட்டிருக்கிறது.

Separate road for Harijans

* 39 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether a separate road has been laid for Harijans in Sevalapuri village of Gingee taluk in South Arcot district; and

(*b*) if so, the details thereof ?

அரிசனங்களுக்குத் தனி சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தென் ஆற்காடு மாவட்டம், செஞ்சி தாலுக்கா, செவலபுரி கிராமத்தில் அரிசனங்களுக்கெனத் தனியாகச் சாலை போடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

[28th January 1972

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

MR. CHAIRMAN: Questions are over.

(*Note.*--An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

II. ADJOURNMENT MOTION *re* FAILURE TO OFFER PROTECTION TO THE MEETING CONDUCTED BY THE RULING CONGRESS AT TIRUCHI ON REPUBLIC DAY.

MR. CHAIRMAN: I am going to take up only the 'Adjournment Motion' regarding the incident at Tiruchi. Regarding B.& C. Mills, particulars are awaited and I will take it up tomorrow.

I have received notice of a motion from Thiru M. Arumugaswami, M.L.C., for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the failure of the police to offer legitimate protection to the meeting conducted by the Ruling Congress at Tiruchi on the Republic Day and to prevent organized attack on the speakers and audience.

I want to know from the hon. Member how the matter falls within the scope of the rules and also the viewpoint of the Government in this regard from the Hon. the Chief Minister.

Now the hon. Member will briefly explain.

* திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்த ஆண்டு குடியரசு தினத்தன்று திருச்சியில் காங்கிரஸ் (ஆர்) கட்சியைச் சேர்ந்தவர்கள் நடத்திய கூட்டத்தில் யாரோ சிலர்—எந்தக் கட்சி என்று என்னாலே திட்டவட்டமாகச் சொல்ல இயலாது—அந்தக் கூட்டத்தில் கலகம் செய்ததாகவும், ஆனால் கலகம் செய்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிப் பேசாதே என்று கோஷமிட்டதால் ஒருவனை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்று யூகிக்க இடமிருக்கிறது என்றும் தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. அந்த நேரத்தில் அங்கே கூட்டத்தில் காவலாக இருந்த காவல் துறையைச் சேர்ந்த போலீஸ்காரர்கள், அந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டு வெறுமனே சும்மாயிருந்ததாகவும், பாதுகாப்பு நடவடிக்கைகள் கோரப்பட்டபோதும்கூட, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மேடையிலிருந்த சிலர் தாக்கப்பட்டார்கள் என்றும் தெரிகிறது. இன்றையதினம் காலையில் அந்தக் கூட்டத்தில் பேசிய தஞ்சை இராமமூர்த்தி என்ற தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் என்னோடு தொலைபேசியில் பேசியபோது, அவரே மேடையில் இருந்ததாகவும், அவரைக் குறிப்பிட்டே வசை மாரி பாடி தாக்க முற்பட்டதாகவும், அவர் சொன்னார். இதுபோன்ற நிகழ்ச்சிகள் சமீபகாலமாக தமிழ்நாட்டில் பல இடங்களிலேயும் நடந்துகொண்டு வருகின்றன. எந்த ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்கள்